## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.74/2020.
Prosecution witness for P.W.22.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. தர்மலிங்கம். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.01.2026.

A2 died. A1absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது குரும்பூர் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு மெய்ஞானபுரம் காவல்நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணியில் இருந்தபோது 28.01.2019 அன்று 16.30 மணியளவில் நிலைய குற்ற எண் 9/2019 இதச 307 பிரிவின் படியான முதல் தகவல் அறிக்கை மற்றும் சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை ஆகியவற்றை துரித தபாலாக பெற்று கடவுச்சீட்டு பெற்று சாத்தான்குளம் குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் 18 மணியளவில் குடியிருப்பில் ஒப்படைத்து ஒப்புதல் பெற்றேன். பிறகு நிலையம் வந்து அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை – இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN Date: 2026.01.22 17:53:13 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.74/2020.
Prosecution witness for P.W.23.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ஆனந்தன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.01.2026.

A2 died. A1absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சென்னை E1 மயிலாப்பூர் காவல்நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் தலைமை காவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு மெய்ஞானபுரம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது 29.01.2019 அன்று காலை 10.10 மணியளவில் கடவுச்சீட்டு பெற்று நிலைய குற்ற எண் 9/2019 இதச 302 பிரிவின் படியான வழக்கு சம்பந்தப்பட்ட இறந்துபோன வில்வின் ரெஜிஷ் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரிக்கு தூத்துக்குடி அரசு மருத்துவமனை சவக் கிடங்கிலிருந்து ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்துடன் எடுத்துச் சென்றேன். பிரேத பரிசோதனை சமயத்தில் நான் மருத்துவருடன் இருந்து பிரேத பரிசோதனை முடிந்த பிறகு பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தேன். பிரேதத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்த கருப்பு, பழுப்பு, வெள்ளை மற்றும் வெளிர் பழுப்பு நிறத்தில் கட்டம் போட்ட சாரம் ஒன்று, ரத்தக்கறை படிந்த ஸ்கோப் என்று எழுதப்பட்ட கருஞ்சிவப்பு நிறமுள்ள ஜட்டி ஒன்று, ரத்தக்கறை படிந்த இந்தியன் என்று காலரில் எழுதப்பட்ட காக்கி நிற அரைக்கை சட்டை ஒன்று ஆகியவற்றை

பெற்று அன்றே 17 மணியளவில் நிலைய எழுத்தரிடம் ஒப்படைத்தேன். மேற்படி உடைகள் முறையே **சா.பொ.2 முதல் 4**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN Date: 2026.01.22 17:53:19 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.74/2020.
Prosecution witness for P.W.24.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. பேச்சி ஆனந்த்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.01.2026.

A2 died. A1absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது ஆத்தூர் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு மெய்ஞானபுரம் காவல்நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணியில் இருந்தபோது 30.01.2019 அன்று காலை 9.30 மணியளவில் நிலையத்திலிருந்து பிரேத விசாரணை அறிக்கையை பெற்று சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் அவர்களிடம் ஒப்படைத்தேன். பின்பு 27.02.2019 அன்று மேற்படி நீதிமன்றத்திலிருந்து ரத்தம்படிந்த மண், ரத்தம்படியாத மண், விகேசி பிரைடு என்று எழுதப்பட்ட ஒரு ஜோடி செருப்பு, ரத்தம்பட்ட கருப்பு, பழுப்பு , வெளிர் பழுப்பு மற்றும் வெள்ளை கட்டம்போட்ட மூட்டப்படாத சாரம் ஒன்று, ஸ்கோப் என்று எழுதப்பட்ட கருஞ்சிவப்பு நிற ஜட்டி ஒன்று, 41 செமீ நீளமுள்ள இரும்பு சக்கர ஸ்பேனர் ஒன்று, ரத்தக்கறை படிந்த இந்தியன் என்று எழுதப்பட்ட காக்கிநிற அரைக்கை சட்டை ஆகியவற்றை அட்டை பெட்டியில் வைத்து சீல் வைத்து அதைப்பெற்று திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். மேற்படி ரத்தம்பட்ட மற்றும் ரத்தம்படியாத மண் **சா.பொ.5 மற்றும் 6**. மேற்படி ஒரு ஜோடி செருப்பு **சா.பொ.7**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.01.22 17:53:27 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.